இடங்களில் மூன்று நான்கு வருஷங்கள் பாக்கிகள் நின்று விடுகின்றன. ஆகையால் இப்பொழுது நடைமுறை வருஷத்திற்கும், பழைய பாக்கியில் ஒரு பகுதியையும் சேர்த்து வசூல் செய்கிறார்கள்.

Women teachers

* 341 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிக்கூடங்களிலே 1 முதல் 3-ஆம் வகுப்பு வரைக்கும் பெண்களையே ஆசிரியைகளாக நியமிக்கும் திட்டம் அமுலாக்கப்பட்டு வருகிறதா?

(ஆ) அப்படியாயின் எத்தனை உபாத்தியாயினிகள் தற்போது அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM: (அ) There is no proposal to appoint only women as teachers for standards I to III in elementary schools.

(ஆ) Does not arise.

SRI P. G. MANICKAM: வொயிட் பேப்பரை ஆராய்ச்சி செய்ய நியமிக்கப்பட்ட சட்டசபைக் குழுவினர் இவ்வாறு ஒன்று முதல் மூன்றாவது வகுப்பு வரை பெண்களை ஆசிரியர்களாகப் போடுவது நல்லது என்று சர்க்காருக்கு தெரிவித்து இருக்கிறார்கள். அப்படிச் செய்தால், குழந்தைகளின் நடவடிக்கைகளை அறிந்து பெண்கள் வேலை செய்வார்களாதலால், இதனால் படிப்பின் தரமும் அதிகரிக்கும். ஆதலால் இதுபற்றி சர்க்கார் மீண்டும் கவனம் செலுத்துமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: கூடிய வரையில் பெண் ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

Statute of V. O. Chidambaram Pillai

* 343 *Q.*—SRI S. M. ANNAMALAI: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் அளிப்பாரா—

(அ) சென்னை கடற்கரையில் வ. உ. சிதம்பரனார் சிலை வைக்க உத்தேசம் உண்டா?

(ஆ) மேலும் என்னென்ன சிலைகள் வைக்க திட்டம் உள்ளது?

THE HON. SRI P. KAKKAN: (*a*) & (*b*) No, Sir.

SRI S. M. ANNAMALAI: நமது தமிழ்நாட்டில் கப்பல் ஓட்டிய தமிழரின் பெயர் நிலைத்திருக்க வேண்டியாவது இந்த சர்க்கார் மறு பரிசீலனை செய்து சிதம்பரனார் அவர்களின் சிலையை கடற்கரையில் வைக்க முன்வருவார்களா?

20th August 1960]

THE HON. SRI P. KAKKAN : செக்கிழுத்த செம்மல், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனாரின் ஞாபகார்த்தமாக மக்கள் தெரிந்து கொள்வதற்காக, அவர்கள் எங்கு பிறந்து வளர்ந்தாரோ அந்த இடத்தை வாங்கி அங்கு சிற்ப கலையுடன் வீடு கட்டி, மக்கள் அறிந்து கொள்ளும்பொருட்டு அதை ஒரு ஞாபகார்த்த சின்னமாக வைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Supply of clothing to Harijan students

* 344 Q.—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-61-ல் ஹரிஜன மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் உடைகள் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு ?

(ஆ) எத்தனை பேர்களுக்கு உடைகள் வழங்கப்படும் ?

THE HON. SRI P. KAKKAN : (அ) The question of sanctioning an allotment for supply of clothing to Harijan pupils during 1960–61 is still under consideration.

(ஆ) Does not arise.

SRI P. G. MANICKAM : தற்போது கல்வி இலாகா மூலம் எல்லா ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் எல்லோரும் ஒரே விதமான உடை உடுத்தி வருவது நல்லதென்று ஒரு யோசனை இருந்து வருவதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட யோசனை வரும்போது, ஹரிஜன குழந்தைகள் அப்படி ஒரேவிதமான உடை உடுத்தி வரமுடியாத நிலையில் இருப்பதால், எல்லா ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் ஹரிஜன குழந்தைகளுக்கு இலவசமாக உடை வழங்குவதுபற்றி ஹரிஜன நல இலாகா பரிசீலனை செய்யுமா ? அரசாங்கம் இதுபற்றி பரிசீலனை செய்து ஒரு நல்ல முடிவிற்கு வருவார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கல்வி அமைச்சர் அவர்களும், நானும், இதர அதிகாரிகளும் பரிசீலனை செய்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பப் பள்ளிகளில் படிக்கிற எல்லா ஹரிஜன பெண் குழந்தைகளுக்கும் உடை வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

Minor ports

* 345 Q.—SRI A. VEDARATHNAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா—

(அ) எந்தெந்த சிறிய துறைமுகங்களில் கடல் மார்க்கம் போக்கு வரத்து நடைபெற்று வருகின்றன ?

(ஆ) பாக்கி துறைமுகங்களையும் போக்கு வரத்துக்குப் பயன் படுத்தும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ? அப்படியானால், அதன் விவரமென்ன ?